


கருத்து
தீவிரித்துப்
போவோம் வாருங்கள்.
சகரியா 8:21

# தரிசன பாடல்கள்



இந்திய
மிஷனெரி
சங்கம்

## இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவித புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

**WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599**

**Email: wordofgod@wordofgod.in**

## *Wishing you in the mighty name of Jesus Christ*

*We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.*

*95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.*

**WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599**

**Email: wordofgod@wordofgod.in**

...நீ போய்
அதைச் சுதந்தரித்துக்கொள்...
உபாகமம் 1:21

## இந்திய மிஷனெரி சங்கம்

# சுதந்தரிப்போம் 2028

**கிறிஸ்துவுக்குள் அன்பான என் உடன் பங்காளர்களே...**

இயேசு கிறிஸ்துவின் ஈடு இணையற்ற நாமத்தில் வாழ்த்துக்கள்.

நம்முடைய சங்கத்தின் புதிய நூற்றாண்டு தரிசனம் முதல் 25 ஆண்டுகளில் (2028ஆம் ஆண்டிற்குள்) இந்தியாவிலுள்ள 683 மாவட்டங்களுக்கும் மிஷனெரிகளை அனுப்ப வேண்டும் என்பதே. இதை நிறைவேற்ற நாம் ஜெபத்துடன் ஆரம்பித்த குறுகிய கால திட்டத்தின்படி 01-10-2015 முதல் 31-03-2016க்குள் 110 மாவட்டங்களுக்கு கடந்து செல்லவும், 2966 கிராமங்களை சந்திக்கவும், 1,35,676 பேருக்கு நற்செய்தி அறிவிக்கவும் 2736 புதிய விசுவாசிகளை திருமுழுக்கின் மூலம் திருச்சபையில் இணைக்கவும், 60 மிஷனெரிகளை புதிதாக நியமிக்கவும் கர்த்தர் கிருபை செய்திருக்கிறார். அல்லேலூயா.

மீண்டும் இத்தரிசனத்தைத் தொடர்ந்து நிறைவேற்றும் வண்ணமாக புதிய நிதியாண்டிலும் (2016-17) கர்த்தர் கொடுத்த கீழ்க்காணும் இலக்குகள் நிறைவேற்றப்பட ஜெபியுங்கள்.

**புதிதாக**

- 125 மாவட்டங்களில் மிஷனெரி பணிமையம் ஏற்படுத்துதல்
- 6000 கிராமங்களுக்கு கடந்து செல்லுதல்
- 6 இலட்சத்திற்கும் அதிகமானோருக்கு நற்செய்தி அறிவித்தல்
- 30,000 ஆத்துமாக்களை கிறிஸ்துவின் மந்தையில் இணைத்தல்
- 300 மிஷனெரிகளை பணித்தளங்களில் நியமித்தல்
- 2000 ஜெபக்குழுக்களை (1000 பணித்தளத்தில் + 1000 அபிவிருத்தி பகுதிகளில்) உருவாக்கி இத்திட்டங்களை நிறைவேற்ற திறப்பிலே நிற்பது
- தரிசனத் திட்டங்கள் நிறைவேற தேவையான ரூ.5 கோடியை ஜெபத்துடன் கண்டுபிடித்தல்

2016-2017 தரிசனத் திட்டம் நிறைவேற கர்த்தருடைய கிருபை, உங்களுடைய கருத்தான ஜெபம் மற்றும் தீவிரமான ஈடுபாட்டை எதிர்பார்க்கிறோம்.

- **கிராம ஊழியத்தை மாதம் ரூ.500 கொடுத்து தாங்குகிற 6000 ஆதரவாளர்கள் தேவை.**
- **மிஷனெரியை மாதம் ரூ.3500 கொடுத்து தாங்குகிற 300 ஆதரவாளர்கள் தேவை.**

திருச்சபையாக, திருச்சபையின் சங்கங்களாக, குடும்பமாக ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட கிராமங்களைத் தத்தெடுக்கவும், மிஷனெரிகளை ஆதரிக்கவும் உங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். **"தீவிரித்துப் போவோம் வாருங்கள்"** என்ற சகரியா 8:21ஆம் வசனத்தின்படி, நாம் தீவிரமாக கிறிஸ்துவின் இராஜ்ய கட்டுமானப் பணியில் இணைந்து செயல்படுவோம். கர்த்தர் நம் ஒவ்வொருவர் வாழ்விலும் அதிசயங்களைச் செய்வாராக.

"உன் இருதயம் அதிசயப்பட்டு பூரிக்கும்" ஏசாயா 60:5

**OUR ONLINE ACCOUNT DETAILS**

| | | | |
|---|---|---|---|
| A/c Name | : INDIAN MISSIONARY SOCIETY | Branch | : Palayamkottai |
| A/c No. | : 10481946227 | IFSC Code | : SBIN0001619 |
| Bank | : State Bank of India | SWIFT No | : SBININBB468 |

கிறிஸ்துவின் இராஜ்யக் கட்டுமானப் பணியில்

**Rev.J.கிங்ஸ்லி ஜான் ஸ்டீபன்**

பொதுக்காரியதரிசி

INDIAN MISSIONARY SOCIETY
118, Trivandrum R...
Tirunelveli-627 002. Ph : 0462-2502600, 250...
E-mail : imstn1903@gmail.com Web : www.ims...

# INDIAN MISSIONARY SOCIETY

# MISSIONARIES & STAFF RETREAT

## PAALANA BHAVANA, BENSON TOWN, BANGALORE

## 17th to 19th MAY 2016

*Let Us Go Speedily. Zahariah-8:21*

**17th Tuesday**

| | |
|---|---|
| 10:30 am | Arrival & Registration |
| 10:30am-11:00 am | Fellowship Tea |
| 11:00am-12:15 pm | **SESSION I**<br>Singing & Worship<br>Welcome & Purpose of the meeting by<br>**Rev.J.Kingsly John Stephen,** General Secretary<br>Inaugural Address by<br>**The Rt.Rev.Dr.Prasanna Kumar Samuel,**<br>Bishop in Karnataka Central Diocese |
| 12:15 pm - 01:15pm | **SESSION II**<br>The Minister and the Vision by<br>**Dr.R.S.A.Williams,** Mumbai |
| 01:15 pm – 04:15 pm | Lunch & Rest |
| 04:15 pm- 04:30 pm | Singing |
| 04:30 pm- 05:30 pm | **SESSION III**<br>Where we are now? by<br>**Rev.J.Kingsly John Stephen,** General Secretary |
| 05:30 pm – 06:30 pm | Separate Meeting for Regional Field Coordinator, Field in Charges Families |
| 06:30 pm – 06:45 pm | Singing |
| 06:45 pm- 07:45 pm | **SESSION IV**<br>The Minister & his family by **Dr.R.S.A.Williams** |
| 07:45 pm- 08:15 pm | Fellowship Dinner |
| 08:15 pm- 10.00pm | Talent Hour & Skit Vision Ark |

| | |
|---|---|
| **18th Wednesday** | |
| 06:00am – 07:30am | Rise & Shine |
| 07:30am – 08:30am | Morning Devotion by<br>**Mr.D.Soundrapandian,** President, IMS |
| 08:30am – 09:30 am | Breakfast |
| 09:30am – 10:00 am | Singing |
| 10:00am – 11:00 am | **SESSION V**<br>The Minister and his faith in Action by<br>**Dr.R.S.A.Williams** |
| 11:00am -11:30 am | Tea |
| 11:30 pm – 01:30 pm | Personal & Field Testimony<br>Surprise Time<br>Rejoicing<br>Echoes from Battlefield<br>Praising & Prayer |
| 01:30pm – 04:15 pm | Lunch & Rest |
| 04:15pm – 04:30 pm | Singing |
| 04:30 pm – 05:30 pm | **SESSION VI**<br>The Minister & his rewards by **Dr.R.S.A.Williams** |
| 05:30pm – 06:45 pm | Separate Meeting for<br>Missionaries Wife & Spinster Missionaries<br>**Rev.Mrs.Latha Kingsly & Mrs.Shirwin Sundersingh**<br>Youth - **Mr.D.S.A.Prabaharan**<br>Children - **Mr.K.Nithiyananthan & Team**<br>Promotional & Office Staff families -<br>General Secretary & NPC |
| 06:45 pm – 07:00 pm | Singing |
| 07:00pm – 08:00 pm | **SESSION VII**<br>Where are we going? Vision and Expectation<br>**Rev.J.Kingsly John Stephen,** General Secretary |
| 08:00pm – 08:30 pm | Supper |
| 08:30pm – 10:00 pm | Cultural Events – Children & Youth |
| **19th Thursday** | |
| 06:00am– 07:00am | Rise & Shine |
| 07:00am – 08:30am | Holy Communion Service |
| 08:30 am – 09:30am | Breakfast & End of the Retreat |

## 1

1. தேவ தேவனைத் துதித்திடுவோம்
சபையில் தேவன் எழுந்தருள
ஒரு மனதோடு அவர் நாமத்தை
துதிகள் செலுத்திப் போற்றிடுவோம்

அல்லேலூயா தேவனுக்கே
அல்லேலூயா கர்த்தருக்கே
அல்லேலூயா பரிசுத்தர்க்கே
அல்லேலூயா இராஜனுக்கே

2. எங்கள் காலடி வழுவிடாமல்
எங்கள் நடைகளை ஸ்திரப்படுத்தும்
கண்மணிபோல காத்தருளும்
கிருபையால் நிதம் வழி நடத்தும்

3. சபையில் உம்மை அழைத்திடுவோம்
சகாயம் பெற்று வாழ்ந்திடுவோம்
சாத்தானை என்றும் ஜெயித்திடுவோம்
சாகும் வரையில் உழைத்திடுவோம்

4. ஜீவனுள்ள நாட்களெல்லாம்
நன்மை கிருபை தொடர்ந்திடவே
தேவ வசனம் கீழ்ப்படிவோம்
தேவ சாயலாய் மாறிடுவோம்

5. வானத்தில் அடையாளம் தோன்றிடுமே
இயேசு மேகத்தில் வந்திடுவார்
நாமும் அவருடன் சேர்ந்திடவே
நம்மை ஆயத்தமாக்கிக் கொள்வோம்

## 2

அடைக்கலமே உமதடிமை நானே
ஆர்ப்பரிப்பேனே அகமகிழ்ந்தே
கர்த்தர் நீர் செய்த நன்மைகளையே
நித்தம் நித்தம் நான் நினைப்பேனே

1. அளவற்ற அன்பினால் அணைப்பவரே
எண்ணற்ற நன்மையால் நிறைப்பவரே
மாசில்லாத நேசரே மகிமைப் பிரதாபா
பாசத்தால் உம் பாதம் பற்றிடுவேனே

2. கர்த்தரே உம் செய்கைகள் பெரியவைகளே
கர்த்தரே உம் செய்கைகள் மகத்வமானதே
நித்தியரே உம் நியாயங்கள் என்றும் நிற்குமே
பக்தரின் பேரின்பப் பாக்கியமிதே

3. என்னை என்றும் போதித்து நடத்துபவரே
கண்ணை வைத்து ஆலோசனை சொல்லுபவரே
நடக்கும் வழிதனைக் காட்டுபவரே
நம்பி வந்தோனைக் கிருபை சு+ழ்ந்து கொள்ளுமே

4. கரம் பற்றி நடத்தும் கர்த்தர் நீரல்லோ
கூப்பிட்ட என்னைக் குணமாக்கினீரல்லோ
குழியில் விழாதபடி காத்துக் கொண்டீரே
அழுகையைக் களிப்பாக மாற்றி விட்டீரே

5. பாவங்களைப் பாராதென்னை பற்றிக் கொண்டீரே
சாபங்களை நீக்கி சுத்த உள்ளம் தந்தீரே
இரட்சண்யத்தின் சந்தோஷத்தை திரும்பத் தந்தீரே
உற்சாக ஆவி என்னைத் தாங்கச் செய்தீரே

## 3

மகிழ்ச்சியோடு துதிக்கிறேன்
மனமகிழ்ந்து துதிக்கிறேன்
மன்னவனே இயேசு ராஜா
எங்கள் மனதில் பூத்து மணம் வீசும் ரோஜா
இயேசு ராஜா சாரோன் ரோஜா

1. நாற்றமாக இருந்த வாழ்வை
வாசமாக மாற்றினீரே
பாவியாக இருந்த என்னை
பரிசுத்தனாய் மாற்றினீரே
வல்லவரே நல்லவரே - எங்களை வாழ வைக்கும்
அன்பு தெய்வம் நீரே

2. நெருக்கத்திலே இருந்த என்னை
விசாலத்தில் வைத்தீரே
சேற்றிலிருந்து தூக்கி என்னை
கன்மலை மேல் நிறுத்தினீரே
அற்புதரே அதிசயமே - எங்களை வாழ வைக்கும்
அன்பு தெய்வம் நீரே

3. தாயைப்போல என்னை அவர்
சேர்த்தணைத்துக் கொண்டாரே
தந்தையைப் போல் என்னை அவர்
தோளில் தூக்கிச் சுமந்தாரே
அப்பாவல்லோ என் அப்பாவல்லோ - பிள்ளையல்லோ
செல்லப் பிள்ளையல்லோ

## 4

கைதட்டி பாடி மகிழ்ந்திருப்போம்
கர்த்தர் சமூகத்தில் களிகூறுவோம்
களிகூறுவோம் களிகூறுவோம்
கர்த்தர் சொன்ன வாக்குத்தத்தம் சொல்லி மகிழ்வோம்
களிகூறுவோம் களிகூறுவோம்
கவலைகள் மறந்து களிகூறுவோம்

1. நினைப்பதற்கும் நாம் ஜெபிப்பதற்கும்
அதிகமாய் செய்திடுவார்
2. பயப்படாதே உன்னை மீட்டுக் கொண்டேன்
எனக்கே நீ சொந்தம் என்றார்
3. நன்மையும் கிருபையும் நம்மைத் தொடரும்
ஜீவனுள்ள நாட்களெல்லாம்
4. அறிவு புகட்டுவார் பாதை காட்டுவார்
ஆலோசனை அவர் தருவார்
5. ஆபத்துக் காலத்தில் நோக்கிக் கூப்பிட்டால்
அவர் நம்மை விடுவிப்பாரே

## 5

உம்மைப் பாடாமல் யாரை நான் பாடுவேன்
உம்மைத் துதிக்காமல் யாரை நான் துதிப்பேன்

துதியும் உமக்கே அல்லேலூயா
கனமும் உமக்கே அல்லேலூயா
மகிமை உமக்கே அல்லேலூயா
புகழ்ச்சி உமக்கே அல்லேலூயா

1. உளையான சேற்றிலிருந்து எடுத்தீரே
உன்னத அனுபவம் தந்தீரே
2. துக்கங்களை சந்தோஷமாய் மாற்றினீர்
துயரங்களை மகிழ்ச்சியாக மாற்றினீர்
3. ஒன்றுக்கும் உதவாத என்னையும்
உருவாக்கி உயர்த்தின தெய்வமே
4. ஜீவன் சுகம் பெலன் தந்து காத்தீரே
ஜீவனுள்ள நாளெல்லாம் பாடுவேன்

## 6

ஆத்துமமே என் முழு உள்ளமே உன்
ஆண்டவரைத் தொழு தேத்து இந்நாள் வரை
அன்பு வைத் தாதரித்த
ஆண்டவரைத் தொழு தேத்து

1. போற்றிடும் வானோர் பூதலத்துள்ளோர்
சாற்றுதற் கரிய தன்மையுள்ள
2. தலைமுறை தலைமுறை தாங்கும் விநோத
உலகை முன் தோன்றி ஒழியாத
3. தினம் தினம் உலகில் நீ செய் பலவான
வினை பொறுத்தருளும் மேலான
4. வாதை நோய் துன்பம் மாற்றி அனந்த
ஓதரும் தயை செய் துயிர் தந்த
5. உற்றுனக் கிரங்கி உரிமை பாராட்டும்
முற்றும் கிருபையினால் முடி சூட்டும்
6. துதி மிகுந்தேறத் தோத்திரி தினமே
இதயமே உள்ளமே என் மனமே

## 7

தேவ ஜனமே பாடித்துதிப்போம்
தேவ தேவனை போற்றுவோம்
துதிகள் என்றும் ஏற்றியே
அவரைப் பணிந்திடுவோம்

1. சென்ற நாளில் கண்ணின் மணிபோல்
காத்த தேவனை துதித்திடுவோம்
நீதி தயவு கிருபை நல்கும்
ஜீவ தேவனைத் துதித்திடுவோம்

2. வானம் பூமி ஆளும் தேவன் வாக்கை
என்றுமே காத்திடுவார்
அவரின் உண்மை என்றும் நிலைக்கும்
மகிமை தேவனைத் துதித்திடுவோம்

3. கர்த்தர் நாமம் ஓங்கிப் படர
தேவ மகிமை விளங்கிடவே
தேவ சுதராய் சேவை செய்து
தேவ ராஜனை வாழ்த்திடுவோம்

4. தம்மை நோக்கி வேண்டும் போது
தாங்கி என்றுமே ஆதரிப்பார்
மறந்திடாமல் உறங்கிடாமல்
நினைத்த தேவனைத் துதித்திடுவோம்

5. நமது போரை தாமே முடித்து
ஜெயமே என்றும் அளித்திடுவார்
சேனை அதிபன் நமது தேவன்
அவரை என்றும் போற்றிடுவோம்

## 8

உம்மால் ஆகாத காரியம் ஒன்றுமில்லை (3)
எல்லாமே உம்மால் ஆகும் அல்லேலூயா
எல்லாமே உம்மால் ஆகும்

ஆகும் எல்லாம் ஆகும்
உம்மாலே தான் எல்லாம் ஆகும்

1. சொல்லி முடியாத அற்புதம் செய்பவர் நீரே - ஐயா நீரே
எண்ணி முடியாத அதிசயம் செய்பவர் நீரே - ஐயா நீரே

அப்பா உமக்கு ஸ்தோத்திரம் அன்பே உமக்கு ஸ்தோத்திரம்

2. எனக்குக் குறித்ததை நிறைவேற்றி முடிப்பவர் நீரே - ஐயா நீரே
எனக்காக யாவையும் செய்து முடிப்பவர் நீரே - ஐயா நீரே

3. வறண்ட நிலத்தை நீர் ஊற்றாய் மாற்றுபவர் நீரே - ஐயா நீரே
அவாந்திர வெளியை தண்ணீராய் மாற்றுபவர் நீரே - ஐயா நீரே

## 9

இதுவரை நடத்தி குறைவின்றி காத்து
மகிழ்வை தந்தீரே நன்றி ஐயா
தண்ணீரை கடந்தேன் சோதனை ஜெயித்தேன்
மதிலை தாண்டினேன் உம் பலத்தால்

நன்றி நன்றி ஐயா
உம்மை உயர்த்திடுவேன்

1. ஆபத்து நாளில் அனுகூலமான
துணையுமானீரே நன்றி ஐயா
2. உம் கரம் நீட்டி ஆசீர்வதித்து
எல்லையை பெருக்கினீர் நன்றி ஐயா
3. அபிஷேகம் தந்து வரங்களை ஈந்து
பயன்படச் செய்தீரே நன்றி ஐயா
4. கிருபைகள் தந்து ஊழியம் தந்து
உயர்த்தி வைத்தீரே நன்றி ஐயா

## 10

இஸ்ரவேலின் துதிகளில் வாசம் செய்யும்
எங்கள் தேவன் நீர் பரிசுத்தரே

வாக்குகள் பலதந்து அழைத்து வந்தீர்
ஒரு தந்தை போல என்னை தூக்கிசுமந்தீர்

1. இனி நீர் மாத்ரமே, நீர் மாத்ரமே
நீர் மாத்ரமே என் சொந்தமானீர்
உம்மை ஆராதிப்போம், ஆர்பரிப்போம்
உம் நாமத்தினால் என்றும் ஜெயமெடுப்போம்.
2. எதிர்காலம் இல்லாமல் ஏங்கி நின்றோம்
காலத்தை படைத்தவர் தேடி வந்தீர்
சிறையிருப்பை மாற்றி தந்தீர் சிறுமையின்
ஜனம் எம்மை உயர்த்தி வைத்தீர்
3. செங்கடலையை கண்டு சோர்ந்து போனோம்
யோர்தானின் நிலைகண்டு அஞ்சி நின்றோம்
பயப்படாதே முன் செல்கிறேன் என்றுரைத்து
எம்மை நடத்தி வந்தீர்
4. எதிரியின் படை எம்மை சூழும்போது
ஓங்கிய புயம் கொண்டு யுத்தம் செய்தீர்
பாடச் செய்தீர் துதிக்கச் செய்தீர்
எரிகோவின் மதில்களை இடிக்கச் செய்தீர்.

## 11

உம்மை நம்பி வந்தேன் நான் வெட்கப்படல
உம் தயை என்னைக் கைவிடல
வெறுங்கையாய் நான் கடந்துவந்தேன்
இரு பரிவாரங்கள் எனக்குத் தந்தீர்

ஏல்எல்லோகே ஏல்எல்லோகே
உம்மைத் துதிப்பேன்

1. காயப்பட்டு நின்றேன் கண்ணீரில் சென்றேன்
கலங்கின எனக்காக இறங்கி வந்தீர்
உடன்படிக்கை என்னோடு செய்து
இழந்திட்ட யாவையும் திரும்பத் தந்தீர்

2. வேண்டினோரெல்லாம் விடைபெற்றபோதும்
வேண்டியதெல்லாம் நீர் எனக்குத் தந்தீர்
பரதேசியாய் நான் தங்கினதை
சுதந்திரமாக மாற்றித் தந்தீர்

## 12

ஆர்ப்பரிப்போம் ஆர்ப்பரிப்போம்
அலங்கம் இடியும்வரை ஆர்ப்பரிப்போம்
எக்காளம் ஊதி எரிகோவைப் பிடிப்போம்
ஆரவாரத் துதியோடு கானானுக்குள் நுழைவோம்

இது எழுப்புதலின் நேரமல்லோ
யோசுவாவின் காலமல்லோ

1. துதிக்கும் நமக்கோ தோல்வியில்லை
வெற்றி நிச்சயமே
பெலன் கொண்டு திடமனதாயிருப்போமே - இந்த
பாரதத்தைச் சுற்றி சுற்றி சுதந்தரிப்போமே

2. கர்த்தர் நாமம் சொல்லச் சொல்ல
தடைகள் விலகிடுமே
மாராவின் தண்ணீர்கள் மதுரமாகுமே
யோர்தானின் தடைகள் எல்லாம் விலகிப் போகுமே

3. மாம்சத்தோடும் இரத்தத்தோடும்
நமக்கு யுத்தமில்லை
சர்வ வல்லவரின் ஆயுதத்தை ஏந்திடுவோமே
சாத்தானின் ராஜ்யத்தை அழித்திடுவோமே

## 13

அதிசயங்கள் செய்கிறவர் நம் அருகில் இருக்கிறார்
அற்புதங்கள் செய்கிறவர் ஏசு நமக்குள் வருகிறார் (2)

1. தண்ணீரை இரத்தமாய் மாற்றினார் அதிசயம் எகிப்தின்
ஜாடி தண்ணீரை திராட்சை ரசமாய் மாற்றினார் அதிசயம்

2. குருடருக்கும் செவிடருக்கும் சுகம் தந்தார் அதிசயம் பிறவி
ஒரு சொல்லாலே புயல் காற்றினையும் அதட்டினார் அதிசயம்

3. பாவியான என்னையுமே மாற்றினார் அதிசயம் இந்த
ஏழை என் மீது நேசக்கரம் நீட்டினார் அதிசயம்

## 14

1. கால் மிதிக்கும் தேசமெல்லாம் என்
கர்த்தருக்குச் சொந்தமாகும்
கண் பார்க்கும் பூமியெல்லாம்
கல்வாரி கொடி பறக்கும்

2. பறக்கட்டும் பறக்கட்டும்
சிலுவையின் ஜெயக்கொடி அல்லேலூயா
உயரட்டும் உயரட்டும்
இயேசுவின் திருநாமம் அல்லேலூயா

3. எழும்பட்டும் எழும்பட்டும்
கிதியோனின் சேனைகள்
முழங்கட்டும் முழங்கட்டும்
இயேசுதான் வழியென்று

4. செல்லட்டும் செல்லட்டும்
ஜெபசேனை துதிசேனை
வெல்லட்டும் வெல்லட்டும்
எதிரியின் எரிகோவை

5. திறக்கட்டும் திறக்கட்டும்
சுவிசேஷ வாசல்கள்
வளரட்டும் வளரட்டும்
அபிஷேக திருச்சபைகள்

## 15

எஜமானனே
உம் சேவைக்காய் என்னை அழைத்தீர் (2)

அழியும் என் கைகளை கொண்டு
அழியா உம் ராஜ்ஜியம் கட்ட
பைத்தியமான என்னை தெரிந்தெடுத்தீர்

அழியும் என் உதடுகள் கொண்டு
அழியா உம் வார்த்தையை சொல்ல
எத்தனாய் வாழ்ந்த என்னை தெரிந்தெடுத்தீர்
ஆராதிப்பேன் அதை எண்ணியே
வாழ்நாளெல்லாம் உம்மை மட்டுமே

ஆராதிப்பேன் (8)

1. என்னில் என்ன நன்மை கண்டீர்
   என்னை அழைத்து உயர்த்தி வைத்தீர்

2. உம் சித்தத்தை நான் செய்வதே
   அனுதினமும் என் போஜனம்

## 16

வாழ்ந்தாலும் உம்மோடுத்தான்
மரித்தாலும் உம்மோடுத்தான் நான்
உமக்காகத் தானே உயிர் வாழ்கிறேன்
உம்மைத்தானே நேசிக்கிறேன்
உம்மைப் போல் என்னை மாற்றுமையா
உமக்காக என்னையே தந்தேனையா
ஆத்தும பாரத்தை தாருமையா
அபிஷேகத்தால் என்னை நிரப்புமையா

## 17

இயேசுவின் பின்னால் நான் செல்வேன்
திரும்பி பார்க்க மாட்டேன்
சிலுவையே முன்னால் உலகமே பின்னால்
இயேசு சிந்திய இரத்தத்தினாலே
என்றும் விடுதலையே

1. உலகத்தின் பெருமை செல்வத்தின் பற்று
எல்லாம் உதறி விட்டேன்
உடல், பொருள், ஆவி உடைமைகள் யாவும்
ஒப்புக் கொடுத்து விட்டேன்
நான் அவர் ஆலயம் எனக்குள்ளே இயேசு
என்ன நடந்தாலும் எவ்வேளையிலும்
எப்போதும் துதித்திடுவேன்

2. வேதனை நெருக்கம் இன்னல்கள் இடர்கள்
எதுவும் பிரிக்காது
வெற்றி வேந்தன் என் இயேசுவின் அன்பால்
முற்றிலும் ஜெயம் பெறுவேன்
நிகழ்கின்ற காலமோ வருகின்ற காலமோ
வாழ்வோ சாவோ வல்ல தூதரோ
பிரிக்கவே முடியாது

3. அகிலமெங்கிலும் ஆண்டவன் இயேசு
ஆட்சி செய்திடணும்
ஆவியில் நிறைந்து சத்தியம் பேசும்
சபைகள் பெருகிடணும்
என் சொந்த தேசம் இயேசுவுக்கு
இயேசுதான் வழி என்கிற முழக்கம்
எங்கும் கேட்கணுமே

## 18

ஜீவனுள்ள நாட்களெல்லாம்
இயேசுவுக்காய் வாழ்வோம்
இருப்பதுவோ ஒரு வாழ்வு
அதை அவருக்குக் கொடுத்திடுவோம்

வாழ்ந்திடுவோம் நாம் வாழ்ந்திடுவோம்
இயேசுவுக்காக வாழ்ந்திடுவோம்

1. இயேசுவும் தனக்காய் வாழாமல்
அவர் நமக்காய்த் தானே வாழ்ந்தாரே
உயிரையும் கூட நமக்குத் தந்தாரே
இதற்குப் பதிலாய் என்ன செய்வோமே
நாமும் வாழ்ந்திடுவோம்
இயேசுவுக்காய்

2. ஊழியம் செய்வது பாக்கியமே
அதின் பலனோ இன்று நாம் அறியோமே
கர்த்தர் ஓர்நாள் வந்திடுவாரே
அன்று இதன் பலன் கொண்டு வருவாரே
கண்டு மகிழ்ந்திடுவோம் துள்ளிடுவோம்

3. யாரோ செய்யட்டும் எனக்கென்ன
நான் நலமாய் இருந்தால் அது போதும்
என்றே சுயமாய் வாழ்வதினாலே
பின்னால் நீயும் வருந்திடுவாயே
என்றே உணர்வாயே இன்றே வா

4. உலகத்தையே சொந்தமாக்கினாலும்
அதினாலே லாபம் ஒன்றுமில்லையே
இயேசுவுக்காய் நீ எதை செய்தாயோ
அதுவே உனக்கு உதவிடும் என்றும்
ஓயாது உழைத்திடுவோம் இயேசுவுக்காய்

## 19

புறப்படுவோம் நாம் புறப்படுவோம்
தீவிரமாய் நாம் புறப்படுவோம்
விரைந்திடுவோம் நாம் விரைந்திடுவோம்
ஊழியம் செய்திட விரைந்திடுவோம்

அறுவடைமிகுதி ஆளோயில்லை
அர்ப்பணித்தே நாம் புறப்படுவோம்
அறுப்புக்கு எஜமான் வேலை ஆளை
அனுப்பும்படியாய் வேண்டிக் கொள்ளுவோம்

1. இந்தியர் இயேசுவை அறிந்து கொள்ள
தீவிரமாய் நாம் அறிவிப்போம்
இந்தியாவை நாம் சுதந்தரிக்க
தீவிரமாய் நாம் புறப்படுவோம் - அறுவடை.

2. குஷ்டரோகிகள் நான்குபேரும்
நற்செய்தி அறிவிக்க விரைந்தனரே
இந்நாள் நற்செய்தி அறிவிக்கும் நாள்
அறிவித்தால் குற்றம் சுமராதே - அறுவடை

3. ஊழியம் வளர்ந்திட ஜெபித்திடுவோம்
ஊழியம் சிறந்திட கொடுத்திடுவோம்
ஊழியம் செய்திட அர்ப்பணிப்போம்
இந்தியர் இயேசுவை அறிந்திடுவார் - அறுவடை

## 20

தீவிரித்து செல்லுவோம்
தேசத்தை சுதந்தரிப்போம் - 2

1 இயேசுவே தெய்வம் என்று தம் வாழ்வினில் அறிந்திடா
கோடி கோடியான கூட்டம் தினம் நரகத்தில் அழிகின்றார்
நரரை மீட்க வந்த தேவன் ஏங்கியே தவிக்கின்றார்
எனக்காய் வாராயோவென்றே ஏக்கத்தால் அழைக்கின்றார்

2 என்னால் இயலாதென்றெண்ணி திகைத்திடும் வேளைதனில்
ஆவியால் நம்மைத் தாங்கி தம் மகிமையால் நிரப்புவார்
உள்ளதை அவமாக்க தேவன் நம்மையே தெரிந்து கொண்டார்
உலகினை எண்ணாது நம்முன் தேவனை நோக்குவோம்

3 ஜாதிகள் நமக்கு தந்து ஜனங்களை சேர்ப்பாரே
பூமியின் குடிகள் வந்து தேவனைப் பணிவாரே
திறப்பிலே நின்று ஜெபித்து சுவரை அடைத்திடுவோம்
சிலுவையின் மேன்மை உணர்ந்து தீவிரம் சென்றிடுவோம்

4 என்னைத் தருகின்றேன் நாதா என்றே அர்ப்பணிப்போம்
தன்னையே தந்த அவர்க்காய் உள்ளதைக் கொடுத்திடுவோம்
அழிந்திடும் ஆன்மாக்கள் காப்போம் ஆண்டவர் சேவை செய்வோம்
ஆயுள் முழுதும் காக்கும் தேவன் ஆசீர்வதிப்பாரே

## 21

தேனும் பாலும் ஓடிடும் கானான்
உனக்கே சொந்தம் என்று கூறி
உன்னையும் என்னையும் அழைக்கின்றாரே
செல்வோம் நாம் சுதந்தரிப்போம்

1. செழிப்பான கானானை உன் முன்னே பார்
திறவுண்ட உள்ளங்கள் அங்குண்டு பார்
சகலமும் உனக்கென்று கூறியவர்
செல்கின்றார் தாமே முன்னே

2. அழிந்திட்ட இடங்களும் செழித்திடவே
விழுந்திட்ட ஆன்மாக்கள் பிழைத்திடவே
தருணங்கள் அளித்தவர் நிற்கின்றாரே
செல் சுதந்தரிக்கச் செல்

3. நிலையற்ற அலைமோதும் கடலினைப் பார்
அலைந்தேங்கி திகைத்திடும் மானிடர் பார்
விலையில்லா ஆத்துமாவாம் மீன்களையும்
செல் சுதந்தரிக்கச் செல்

## 22

வெற்றி வெற்றி என்றும் நமதே
வென்றேகி வென்றேகி சென்றிடுவோம்
விரைந்து நாம் ஓடிடுவோம்
விண்ணவர்க்காய் பணி செய்வோம்

ஓடிடுவோம் அல்லேலூயா
கூறிடுவோம் அல்லேலூயா
பாடிடுவோம் அல்லேலூயா
சூடிடுவோம் அல்லேலூயா

1. யூதரை ஆதாயப் படுத்திடவே
யூதருக்கு ஓர் யூதனைப் போல்
அழியாக் கிரீடம் பெற்றிடவே
அடிமை நான் ஓடுகிறேன்

2. பெலவீனரைப் பெலப்படுத்திடவே
பெலவீனர்க்கு ஓர் பெலவீனன் போல்
எப்படியாயினும் அனைவரையும்
இயேசுவின் மந்தையில் சேர்த்திடுவோம்

3. பந்தயச் சாலையில் ஓடுபவர்
அழிவுள்ள கிரீடத்தைப் பெற்றிடுவார்
பரமன் பணிக்காய் ஓடும் நாமோ
அழிவில்லாக் கிரீடம் பெற்றிடுவோம்

## 23

செயல் வீரர்களே ஜெப வீரர்களே
செயல்படுவோம் வாரீர்
புறப்படுங்கள் தேவசேனை
புகுந்திடுவீர் சுவிசேஷக் களம்
சாத்தானை வென்று களிப்புடன்
எடுத்துரைப்போம் இயேசு நாமத்தை

1. ஆயிரம் ஆயிரம் மக்கள்
அடிமையாய் சாத்தானின் வலையில்
எத்தனை நாள்தான் தவிப்பார்
எழுந்து வாரும் இயேசு ஜெய நாமத்தில்

2. உலகத்தில் எண்ணங்கள் எத்தனை
உதறி வாரும் குப்பையென்று
அழிந்திடும் கோதுமை மணிகள்
அழிவில்லா ராஜ்ஜியத்தின் முதற்கனிகள்

3. வெற்றிச் சின்னம் கையில் தாங்கி
சென்றிடுவீர் மக்கள் உள்ளங்கள்
மோட்சத்தின் வழியை உரைப்பீர்
மேன்மையை நாடி விரைந்திடுவீர்

## 24

கலப்பையில் கைவைத்த பின்னாலே நாம்
கலங்கிடோம் கர்த்தர் நம் முன்னாலே

பாரத்தோடு ஜெபத்தோடு இயேசுவைக் கூறிடுவோம்
பரலோகில் இந்தியர்கள் அனைவரையும்
கண்டு மகிழ்ந்திடுவோம் - அல்லேலூயா

1. காடு மலைகள் கடற்கரைகள் பாலைவனங்களிலும்
நாடுகள் எங்கிலும் வாழ்பவர்கள்
இயேசுவை அறியணுமே - அல்லேலூயா

2. நோயும் பசியும் துன்பத்திலும் முதுமையின் துயரத்திலும்
நலிந்து வாடிடும் மனித குலம்
விடுதலை அடையணுமே - அல்லேலூயா

3. பாவம் நீக்கியே நம்மை மீட்க ஜீவன் தந்தவராம்
பரிசுத்தர் இயேசுவை இந்தியர்கள்
ஏற்றுக் கொள்ள உழைத்திடுவோம் - அல்லேலூயா

4. மூடப்பழக்கங்கள் ஒழியணுமே அறியாமை நீங்கணுமே
மறுமை வாழ்விற்கு இயேசுவே வழி
இதை பாரதம் அறியணுமே - அல்லேலூயா

## 25

என்னால் இயன்ற மட்டும்
சுவிசேஷம் சொல்ல வேண்டுமே
எந்தன் இயேசுவே இரட்சகரே
என் ஏக்கம் நோக்கம் அதுவே

சிலராகிலும் இரட்சிப்பைக் காண
செலவாகணும் என் காலம் நேரம்

1. சுவிசேஷம் அரிதான பொக்கிஷமே
அளவிட முடியாத ஐசுவரியமே
அழியாத செல்வமே அன்பு நிறை ஔஷதமே - இது
கிடைக்கப் பெற்ற நான் ஒரு பாக்கியவான்

2. சிலுவையில் நான் கண்ட தூய அன்பு
சீராக நடத்திடும் உம் கிருபை
உலகெல்லாம் அறியவே உம்மிலே மகிழவே
நான் பயன்படும் பாத்திரம் ஆகணுமே

3. வருகையில் உம்மை நான் காணும் போது
வெறுங்கையனாக நின்றிடாது
ஆன்மாக்கள் குவிக்கணும் பரலோகம் மகிழணும் - உம்
அன்பின் கரம் என்னை என்றும் அணைக்கணுமே

## 26

அறுப்பு மிகுதி ஆட்களில்லை
ஆள் இருந்தாலும் அனல் இல்லை
கலங்கும் கண்களில் கண்ணீரோடு
மன்னவன் இயேசு ஏங்குகிறார்

கண்களை ஏறிட்டுப் பார்
வயல் நிலம் அறுப்பிற்கு ஆயத்தமே

1. ஆத்தும ஆதாயப் பணிகட்காய்
ஜெபிக்கும் உள்ளங்கள் எங்கும் இல்லை
உள்ளம் உடைந்து பாரத்தால்
ஜெபிக்க நீ முன் வருவாயா

2. சுயத்தை வெறுத்துக் கொடுத்திடும்
பக்தரின் கரங்கள் வெகு சொற்பம்
இயேசுவுக்காக கொடுப்பாயா
பரலோகத்தில் சேர்த்து வைப்பாய்

## 27

அச்சம் வேண்டாம் பயமும் வேண்டாம்
ஆண்டவர் பணிக்காய் இன்றே புறப்படு
தூக்கம் வேண்டாம் தயக்கம் வேண்டாம்
தூயவர் பணிக்காய் துரிதமாய் புறப்படு

காலம் பொன்னானது
மீண்டும் வராதது 2
கிருபையின் வாசல் அடைபட்டு போனால் சத்தியம் என்னாவது
கிருபையின் வாசல் அடைபட்டு போனால் இரட்சிப்பு என்னாவது

1. தேவன் தந்திடும் புதுப்பெலன் பெற்றிடு
தேவனுக்காக பெரியவை செய்ய நினைத்திடு
விசுவாசமென்னும் கேடயம் அணிந்து புறப்படு

2. வல்லவர் உன்னோடிருப்பார் நடத்துவார்
வழிகளெல்லாம் பாதுகாப்பார் போஷிப்பார்
ஆவியின் பட்டயம் பிடித்திடு இன்றே புறப்படு

3. கண்ணீரோடு வசனங்கள் விதைத்திடு
கெம்பீரமான அறுவடை பெற்றிடு
எஜமான் கண்டு மகிழ்ந்திட உள்ளம் பொங்கிடு

## 28

ஜெபித்திடுவோம் வாருங்கள்
ஜெயம் பெறுவோம் வாருங்கள்
தேவனின் இராஜ்ஜியம்
எழுப்பிடுவோம் வாருங்கள்

ஜெபமே ஜெயம் ஜெபமே ஜெயம்
ஜெபத்தால் காணுவோம் அதிசயம்

1. சாத்தானின் சேனையை வீழ்த்திடுவோம்
சத்தியம் எங்கெங்கும் விதைத்திடுவோம்
சோதனைகள் வந்தாலும் வேதனைகள் சூழ்ந்தாலும்
முழங்கால்களை நாம் முடக்கிடுவோம்

2. காடுகள் மேடுகள் ஓடிடுவோம்
கனிகளை கர்த்தருக்காய் தேடிடுவோம்
கஷ்டம் நஷ்டம் வந்தாலும் கவலைகள் சூழ்ந்தாலும்
கண்களை குளமாக்கி ஜெயித்திடுவோம்

3. திறந்திட்ட வாசல்களை நிலைக்கச் செய்வோம்
தீவிரிக்கும் தடைகளை உடைத்திடுவோம்
திரிந்தெங்கும் செல்லுவோம் திரளாக செல்லுவோம்
தரணியை இயேசுவுக்கு சொந்தமாக்குவோம்

## 29

1. அருளின் மா மழை பெய்யும்
என்று வாக்களித்தோரே
மாரியாய் பெய்திடச் செய்யும்
லோகத்தின் ரட்சகரே

தெய்வன்பின் வெள்ளம்
தெய்வன்பின் வெள்ளம் தேவை
கொஞ்சம் ருசித்த என் உள்ளம்
கெஞ்சுதே இன்னும் தேவை

2. வெட்டாந்தரை நிலந்தானும்
ஏதேன் போல் மாறுமென்றீர்
சாபத்துள்ளான முட்பூண்டு
கேதுருவாகுமென்றீர்

3. தேசத்தின் இருளைப்பாரும்
லோகத்தின் மெய்த்தீபமே
ஆவியின் அருளைத்தாரும்
மனமாற்றும் வல்லவரே

4. ஏழை என் குறைகள் யாவும்
தீர்த்திடும் வல்லவரே
யுத்தத்தில் முன் செல்ல ஏவும்
சேனைத் தளகர்த்தரே

## 30

1. உம்மைத் துதிக்கிறோம் யாவுக்கும் வல்ல பிதாவே
உம்மைப் பணிகிறோம் ஸ்வாமி ராஜாதி ராஜாவே
உமது மா மகிமைக்காக கர்த்தா
ஸ்தோத்திரம் சொல்லுகிறோமே

2. கிறிஸ்துவே இரங்கும் சுதனே கடன் செலுத்தி
லோகத்தின் பாவத்தை நீக்கிடும் தெய்வாட்டுக் குட்டி
எங்கள் மனு கேளும் பிதாவினது
ஆசனத் தோழா இரங்கும்

3. நித்திய பிதாவின் மகிமையில் இயேசுவே நீரே
பரிசுத்தாவியோடேகமாய் ஆளுகிறீரே
ஏகமாய் நீர் அர்ச்சிக்கப்படுகிறீர்
உன்னத கர்த்தரே ஆமென்

## 31

தந்தேன் என்னை இயேசுவே
இந்த நேரமே உமக்கே
உந்தனுக்கே ஊழியஞ்செய்ய
தந்தேன் என்னைத் தாங்கியருளும்

1. ஜீவகாலம் முழுதும்
தேவ பணி செய்திடுவேன்
பூவில் கடும் போர் புரிகையில்
காவும் உந்தன் கரத்தினில் வைத்து

2. உலகோர் என்னை நெருக்கிப்
பலமாய் யுத்தம் செய்திடினும்
நலமாய்ச் சர்வ ஆயுதம் பூண்டு
நானிலத்தினில் நாதா வெல்லுவேன்

3. உந்தன் சித்தமே செய்வேன்
என்றன் சித்தம் ஒழித்திடுவேன்
எந்த இடம் எனக்குக் காட்டினும்
இயேசுவே அங்கே இதோ போகிறேன்

4. கஷ்டம் நஷ்டம் வந்தாலும்
துஷ்டர் கூடிச் சூழ்ந்திட்டாலும்
அஷ்டத்திக்கும் ஆளும் தேவனே
அடியேன் உம்மில் அமரச் செய்திடும்

5. ஒன்றுமில்லை நான் ஐயா
உம்மாலன்றி ஒன்றும் செய்யேன்
அன்று சீஷர்க்களித்த ஆவியால்
இன்றே அடியேனை நிரப்பும்

ஆஜிக்கா தின் யஹோவானே பனாயாஹை.
ஹம் இஸ்மே ஆனந்தித்ஹோ ஆனந்தித்ஹோ

1) ப்ரபு கோ மகிமா மிலே
சாஹே வஹ் மேரா அப்புமான்
வஹ் படே மை கட்டுங்
ரஹே இசிக்கா தியான்

2) ஸ்துதி ப்ரஸன்ஸா கரே
க்யுனா குச் ஹோதா ரஹே
உஸ்கோ ஹம் பாதே ரஹே
சாஹே ஜஹாம்பீ ரஹே

3) ஆத்தாகூ தேரே பாஸ்
முஜ்க்கோ ஹை துஜிஸே ஆஸ்
முஜ்க்கோ கபுல் கர்லே
பாபோஸே சுத்து கர்தே

## கோரஸ் 1 (ஹிந்தி)

பாகோ - 4 ஜீத் கே லியே பாகோ 2
அப்னா லக்ஷ்ய பனாவோ 2
பிரபு கோ ஜீத்தானே கே லியே பாகோ 2
சலோ - 4 ஜீத் கே லியே சலோ 2
அப்னா லக்ஷ்ய பனாவோ
பிரபு கோ ஜீத்தானே கே லியே சலோ 2
பாகோ - 4 ஜீத் கே லியே பாகோ
சலோ - 4 ஜீத் கே லியே சலோ

## கோரஸ் 2 (ஹிந்தி)

துனியாக்கி கோனே கோனே மே
கூன்ஞ்சு ரஹா இஷி கா நாம்
ஆய்சா பியாரா இஷி கா நாம்
துனியா மே அல்லேலூயா

உலகத்தின் மூலை மூலையில்
சென்றிடுதே இயேசு நாமம்
எத்தனை இன்பம் இயேசு நாமம்
உலகத்தில் அல்லேலூயா

## கோரஸ் 3 (ஹிந்தி)

1. உச்சா சப்ஸே உச்சா, ஈசு கா நாம் ஹை
உஸ்னே அப்னே ஹாத்தோ ஸே
ஹமே சம்பாலா ஹை
லால்லல்லாலலா லல்லால்லலா 4

2. நீச்சே சப்ஸே நீச்சே சைத்தான் கா நாம் ஹை
ஈசு கே நாம் ஸே மேனே உஸ்ஸே
ஜீத்தோ சே மாரா ஹை
லால்லல்லாலலா லல்லால்லலா 4

3. ஈசு னே சைத்தான் கோ, குருஸ்ஸே மாரா ஹை
மாரா ஹரிவா சைத்தான்,
மேரே ஜீத்தோ கி நீச்சே ஹை
லால்லல்லாலலா லல்லால்லலா 4

## கோரஸ் 4

அழைத்தவரே! அழைத்தவரே!
என் ஊழியத்தின் ஆதாரமே

எத்தனை நிந்தைகள் எத்தனை தேவைகள்
எனை சூழநின்றாலும் உம்மை பார்க்கின்றேன்
உத்தம ஊழியன் என்று நீர் சொல்லிடும்
ஒரு வார்த்தை கேட்டிட உண்மையாய் ஓடுகிறேன்

வீணான புகழ்ச்சிகள் எனக்கு இங்கு வேண்டாம்
பதவிகள் பெருமைகள் ஒரு நாளும் வேண்டாம்
ஊழியப் பாதையில் ஒன்று மட்டும் போதுமே
அப்பா உன் கால்களின் சுவடுகள் போதுமே

## கோரஸ் 5

அகிலத்தையும் ஆகாயத்தையும்
உந்தன் வல்ல பராக்கிரமத்தாலே
ஆண்டவரே நீர் சிருஷ்டித்தீரே
உந்தன் நல்ல கரத்தினாலே

ஆகாதது ஒன்றுமில்லை உம்மால்
ஆகாதது ஒன்றுமில்லை

சர்வ வல்லவரே கனமகிமைக்கு
பாத்திரரே ஆகாதது என்று
ஏதுமில்லை உம்மால்
ஆகாதது ஒன்றுமில்லை

Ah Lord God, Thou hast made the heavens
And the earth by Thy great power;
Ah Lord God, Thou hast made the heavens
And the earth by Thine outstretched arm.

Nothing is too difficult for Thee,
Nothing is too difficult for Thee;
O, great and mighty God,
Great in power and mighty in deed,
Nothing, nothing, absolutely nothing,
Nothing is too difficult for Thee.

## கோரஸ் 6

ஆராதிப்போம் இயேசுராஜனை
இராக்காலத்தில் நிற்கும் ஊழியரே
நம் கைகளை உயர்த்தியே நாம்
ஆராதிப்போம் இயேசுராஜனை

ருசித்துப்பார்இ இயேசு நல்லவர் (3)
ஆராதிப்போம் இயேசுராஜனை

தூக்கினாரே சேற்றினின்றே
நிறுத்தினாரே கன்மலைமேல்
புதுப்பாடலை எந்தன் நாவில் தந்தார்
துதி பாடுவேன்இ துதி பாடுவேன்

## கோரஸ் 7

இயேசுவின் பின்னே போகத் துணிந்தேன் (3)
பின் நோக்கேன் நான் (2)

சிலுவை என் முன்னே இ உலகம் என் பின்னே (3)
பின் நோக்கேன் நான் (2)

கர்த்தர் என் மித்ரு சாத்தான் என் சத்ரு (3)
பின் நோக்கேன் நான் (2)

## கோரஸ் 8

கர்த்தர் ஆவி என்னில் அசைவாடும்போது
தாவீதைப்போல் துதிப்பேன்
துதிப்பேன்இ துதிப்பேன்
தாவீதைப் போல் துதிப்பேன்

கர்த்தர் ஆவி என்னில் அசைவாடும்போது
தாவீதைப்போல் தட்டுவேன்
தட்டுவேன்இ தட்டுவேன்
தாவீதைப் போல் தட்டுவேன்

கர்த்தர் ஆவி என்னில் அசைவாடும்போது
தாவீதைப்போல் ஆடுவேன்
ஆடுவேன்இ ஆடுவேன்
தாவீதைப் போல் ஆடுவேன்

## கோரஸ் 9

சேற்றிலிருந்து தூக்கினார்
கன்மலை மேல் நிறுத்தினார்
பாவமான வாழ்கையை மாற்றி தந்தாரே
துன்பமான வாழ்க்கையில் இன்பம் தந்தாரே

அவர் எந்தன் கன்மலை (2)
அவர் எந்தன் கன்மலையானார்

Picked me up from the Miry Clay
Put me on the rock to stay
Oh my life was in a mess
I thought there's no way out
Then I cried on Jesus Name
And He gave me a brand new start

# நீங்களும் விண்ணப்பத்தினால் எங்களுக்கு உதவி செய்யுங்கள்... II கொரிந்தியர் 1:11

இந்தியாவில் 22 மாநிலங்களிலும் அண்டை நாடான நேபாளத்திலும் மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போல கைவிடப்பட்டு, சிதறப்பட்டு, கேட்பாரற்று தொய்ந்து போய் அலைந்து திரியும் கோடிக்கணக்கான ஆடுகளை கிறிஸ்துவின் மந்தையில் இணைக்கின்ற உயரிய பணியில் ஈடுபட்டிருக்கிற நம் மிஷனெரிகள் திரளான ஆத்துமாக்களை கிறிஸ்துவின் மந்தையில் சேர்க்கவும், போர் முனையில் முன்னணியில் உயிரைப் பணயம் வைத்து நம்முடைய சார்பாக சுவிசேஷ தீபம் ஏற்றுவதற்கு கடந்து சென்றிருக்கிற நம் மிஷனெரிகளுக்காக நீங்களும் விண்ணப்பத்தினால் உதவி செய்வீர்களா? கர்த்தருடைய இராஜ்யத்தை விரைந்து கட்ட மிகவும் அவசியமான, அவசரமான தேவை உங்கள் ஊக்கமான, கருத்தான ஜெபமே.

"நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது" யாக்கோபு 5:16 என்ற வேத வசனமும் ஜெபத்தின் வலிமையை முக்கியப்படுத்துகிறது.

## ஜெபிக்க

### சுவிசேஷப்பணி...

- அன்பரின் அறுவடைப் பணிக்குத் திரளான ஊழியர்கள் எழும்ப...
- களப்பணியில் ஈடுபடும் நம் மிஷனெரிகள் மற்றும் சுதேச ஊழியர்களை கர்த்தர் வல்லமையாக பயன்படுத்த, பாதுகாக்க...
- நம்முடைய ஊழிய களிகளில், தங்களை ஊழியத்திற்கு அர்ப்பணித்திருக்கிற உள்ளூர் ஊழியர்கள் கர்த்தரின் கரத்தில் வல்லமையான கருவியாக பயன்பட....
- விதைக்கப்படுகிற சுவிசேஷ விதைகள் 100 மடங்கு பலன் தர....
- ஊழியர்களுக்கும், ஊழியங்களுக்கும் விரோதமாய் எழும்புகிறவர்கள் இயேசுவின் அன்பினால் சந்திக்கப்பட...
- இதுவரை நாம் கட்டியெழுப்பியிருக்கிற 304 பெரிய ஆலயங்களிலும், 2228 வீடுகளிலும் நடைபெறும் ஆராதனைகளில் திரளானோர் பங்கு பெற...
- நாம் கிரமமாக சுவிசேஷம் அறிவிக்கும் 11343 கிராமங்களிலும் ஆராதனைக் குழுக்கள் உருவாக...
- டோனாவூரிலும், பிற பகுதிகளிலும் தங்கி படிக்கும் நம் மிஷனெரிகளின் குழந்தைகளுக்கு கர்த்தர் சகல கிருபைகளையும் நிறைவாய் அருள...

## கல்விப் பணி... (ஒடிசா – 2, சத்தீஷ்கார்– 2, ஜார்கண்ட்–1, கேரளா–1)

- நமது 6 பாடசாலைகளில் பயிலும் 3738 மாணவ, மாணவியரின் கல்வி கண்களோடு, ஆன்மீக கண்களும் திறக்கப்படவும், அறியாமை, மூட பழக்க வழக்கங்களிலிருந்து விடுதலைப் பெற...
- மாணவ, மாணவியர்கள் உயர்படிப்பில் அதிக மதிப்பெண்கள் பெறவும், வரும் நாட்களில் திருச்சபை மற்றும் தேச தலைவர்களாக உருவாகவும்....
- பட்டதாரி ஆசிரியர்கள் கிடைக்க, படிக்கிற ஒவ்வொரு பிள்ளைகளும் கிறிஸ்துவின் அன்பைக் கண்டு கொள்ள....
- நமது பள்ளிகளுக்குத் தேவையான கட்டிடங்கள், உபகரணங்கள். அரசாங்க அங்கீகாரங்கள் கிடைக்க..
- அரசாங்கத்தின் மூலம் நம்முடைய பள்ளிகளுக்கு வரும் மறைமுகமான தடைகள் நீங்க...

## விடுதிப் பணி...

- 33 விடுதிகளில் தங்கி பயிலும் 2518 மாணவ, மாணவியர்கள் மற்றும் 12 பகல் நேரப் பராமரிப்பு மையங்களுக்கு வந்து செல்லும் 607 மாணவ, மாணவியரும் கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ள, வரும் நாட்களில் ஊழியர்களாய் எழும்ப...
- நமது விடுதி பிள்ளைகள் நிமித்தம் அவர்கள் சார்ந்து இருக்கிற கிராமங்கள், இன மக்கள் மத்தியில் நல்ல தொடர்புகள் ஏற்பட்டு திருச்சபைகள் உருவாக, பெற்றோர், உடன் பிறந்தோர் இயேசுவை ஏற்றுக் கொள்ள, கர்த்தர் நம் மிஷனெரி ஆசிரியர்களை, பொறுப்பாளர்களை பயன்படுத்த...
- நமது விடுதிகளுக்குத் தேவையான கட்டிடங்கள், உபகரணங்கள் கிடைக்க...
- இப்பணிக்கு ஆதரவாளர்கள் திரளாய் எழும்ப, ஆதரிக்கும் குடும்பங்களைக் கர்த்தர் ஆசீர்வதிக்க...
- விடுதி காப்பாளர்களுக்கு பிள்ளைகளை வழிநடத்த, நல்ல தலைவர்களை, சீஷர்களை, மிஷனெரிகளை உருவாக்க கர்த்தர் விசேஷித்த ஞானத்தைக் கொடுக்க...
- விடுதியில் தங்கிப் பயிலும் பிள்ளைகளைக் கர்த்தர் வியாதி, பிசாசு, வீணான பயங்கள் ஆகியவற்றிலிருந்து விலக்கிக் காத்துக் கொள்ள...

## மறுவாழ்வுப் பணி...

(மருத்துவப் பணி, இலவச தையல் மற்றும் கணிணிப் பயிற்சி)

- மருத்துவர்கள், செவிலியர்கள், தையல் மற்றும் கணிணிப் பயிற்சியாளர்கள் திரளாய் எழும்ப...

- மூட பழக்க வழக்கங்கள், அறியாமை, மிகவும் பின் தங்கிய சுகாதாரமற்ற சூழ்நிலைகள் நிமித்தம் சரீர சுகம் வேண்டி ஆடு போடவும், மந்திரவாதிகளை நாடவும், பூஜாரிகளை தேடவும் கடந்து செல்லுகிற மக்கள் கூட்டம் மருத்துவத்தாலும், கிறிஸ்துவாலும் சுகம் பெற...
- நம்முடைய அனைத்துப் பணித்தளங்களிலும் மருத்துவ மையங்கள் ஆரம்பிக்கப்பட.....
- நமது பணித்தளங்களில் 25 இடங்களில் இலவச தையல் பயிற்சி மற்றும் 6 இடங்களில் நடைபெறும் இலவச கணிணிப் பயிற்சியில் பயிலும் அனைவரும் கிறிஸ்துவின் அன்பை கண்டு கொள்ளவும், தொடர்ந்து விசுவாசத்தில் நிலைத்திருக்கவும்...

## சபை கட்டுவோர் குழு... (Church Planters Fold)

- 01-10-2015 முதல் 31-03-2016 வரை நாம் கடந்து சென்றிருக்கும் 110 மாவட்டங்களிலும், திறந்த வாசலையும், நல்ல அறுவடையும் கொடுக்க, புதிதாக இந்த ஆண்டு கடந்து செல்ல திட்டமிட்டிருக்கும் 125 மாவட்டங்களுக்காக..
- நாம் புதிதாக நியமித்திருக்கும் 60 மிஷனெரிகளைக் கர்த்தர் வல்லமையாய் பயன்படுத்த...
- 6 லட்சம் ஆத்துமாக்களுக்கு புதிதாக நற்செய்தி அறிவிக்கப்பட...
- 300 மிஷனெரிகள் இந்த ஆண்டு அனுப்பப்பட, நல்ல அர்பணிப்புள்ள மிஷனெரிகள் கிடைக்க...
- மாதந்தோறும் ரூ.3500/- கொடுத்து மிஷனெரிகளைத் தாங்குகிற குடும்பங்கள் திரளாய் எழும்ப...
- இத்திட்டத்தை வெகு எளிதில் நிறைவேற்ற 2000 ஜெபக்குழுக்கள் எழும்ப, இத்திட்டத்தின் தேவை ரூ.5 கோடி சந்திக்கப்பட...
- புதிய பணி மையங்களில் வெளிப்படையான அற்புதங்கள், அடையாளங்கள் நடைபெற...
- புதிய பணித்தள மையங்களை ஜெபத்தினால் தாங்க திரளான ஜெப பங்காளர்கள், ஜெபக்குழுக்கள் எழும்ப...
- புதிய மாவட்ட பணிமையங்களை நம் கிளைச் சங்கங்களும், திருச்சபைகளும் பொறுப்பெடுத்துக் கொள்ள...

## அபிவிருத்திப் பணி...

- நம் சங்கத்தின் தேவைகளைச் சந்திப்பதற்காக செயல்படும் 24 கிளைச் சங்கங்கள் மற்றும் 236 வட்டார மையங்களில் நடைபெறும் அபிவிருத்திப் பணி ஊழியங்கள் வளர்ந்து பெருக...

- மிஷனெரி பணியின் முதுகெலும்பாக விளங்கும் 528 ஜெபக்குழுக்களின் எண்ணிக்கை வரும் நாட்களில் பன் மடங்காக பெருக...
- அபிவிருத்திப் பணி ஊழிய வளர்ச்சியில் இணைந்து செயல்படும் ஜெபக் குழு தலைவர்கள் (Prayer Group Leader), வட்டார தலைவர்கள் (Area Leader), கௌரவ அபிவிருத்தி ஒருங்கிணைப்பாளர்கள் எண்ணிக்கை வரும் ஓர் ஆண்டிற்குள் இரண்டு மடங்காக பெருக...
- இதுவரை கடந்து சென்றிராத புதியப் பகுதிகள் கண்டுபிடிக்கப்படவும், புதிய அபிவிருத்தி ஊழியர்கள் நம்முடைய சங்கத்தில் திரளாக இணையவும்...
- நம்முடைய 71 அபிவிருத்தி ஊழியர்களும் நமது சங்க வளர்ச்சிக்காக எடுக்கும் அனைத்து முயற்சிகளையும் கர்த்தர் ஆசீர்வதிக்க, இவர்களின் குடும்பங்களில் கர்த்தருடைய கிருபை பெருக...
- புதிய விற்பனை விழாக்கள் ஆரம்பிக்கப்பட...
- குடும்ப தரிசனக் கூடுகைகள், வாலிப சிறப்புக் கூடுகைகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் மூலம் புதிய ஆதரவாளர்கள், மிஷனெரிகள் எழும்ப...
- தரிசனப் பேழை (Vision Ark) குழுவினரை கர்த்தர் வல்லமையாய் பயன்படுத்த, பிரயாண பாதுகாப்பிற்காக, பங்கு பெறும் தன்னார்வ ஊழியர்களை கர்த்தர் ஆசீர்வதிக்க...
- தரிசனக் கலைநிகழ்ச்சிகள் நடத்துவதற்கு புதிய தொடர்புகள் கிடைக்க...
- நிகழ்ச்சிகள் மூலம் பங்கு பெறுவோர் தங்களை இவ்வூழியத்தில் இணைத்துக் கொள்ள...
- இந்த ஆண்டின் பணித்தளத் தேவைகளை சந்திப்பதற்காக சங்கத்திற்கு தேவைப்படும் ரூ.29 கோடியே 35 லட்சம் மற்றும் அறக்கட்டளைக்கு தேவைப் படும் 9 கோடியையும் இணைத்து ரூ.38 கோடியே 35 லட்சத்தை சந்திக்க எடுக்கும் முயற்சிகளைத் கர்த்தர் வாய்க்கப்பண்ண...

# 2016-17ன் செயல்திட்டம்




125 மாவட்டங்களில்
மிஷனெரி பணி
மையம் அமைத்தல்



6000
கிராமங்களுக்கு
கடந்து செல்லுதல்




6 இலட்சத்திற்கும்
அதிகமானோருக்கு
நற்செய்தி அறிவித்தல்






30,000
ஆத்துமாக்களை
கிறிஸ்துவின் மந்தை
யில் இணைத்தல்






300
மிஷனெரிகளை
பணித்தளங்களில்
நியமித்தல்



2000
ஜெபக்குழுக்களை
உருவாக்குதல்

**தேவை**
**ரூ.5 கோடி**

2016-2017 தரிசனத் திட்டம் நிறைவேற கர்த்தருடைய கிருபை, உங்களுடைய கருத்தான ஜெபம் மற்றும் தீவிரமான ஈடுபாட்டை எதிர்பார்க்கிறோம்.



# புதிய நூற்றாண்டு தரிசனம்

நம்முடைய சங்கத்தின்
புதிய நூற்றாண்டு தரிசனத்தின்படி
முதல் 25 ஆண்டுகளில் (2028ஆம்
ஆண்டுக்குள்) இந்தியாவில் உள்ள 683
மாவட்டங்களுக்கும் ஒரு மிஷனெரியையாவது
அனுப்பி ஒரு மாவட்ட பணிமையம்
ஆரம்பிக்கப்படவேண்டும் என்பதாகும்.
இத்தரிசனத்திட்டத்தை நிறைவேற்ற
புதிய மாவட்டங்களில் நாம் சந்திக்கும்
**கிராமங்களை மாதம் ரூ.500/-**
கொடுத்து தாங்குவோர் எழும்பிட
**ஜெபிப்போம்.**

The General Secretary
**INDIAN MISSIONARY SOCIETY**
118, Trivandrum Road, Palayamkottai, Tirunelveli - 627 002
☎ 0462-250614, 2502613 Fax : 0462 - 2502971
E-mail : imstin1903@gmail.com Web : www.imst.co.in